# Praise the Lord
## The Voice of God Presents

ஆராதிப்போம் ஆராதிப்போம்
ஆண்டவர் இயேசுவையே ஆராதிப்போம்
போற்றிடுவோம் வாழ்த்திடுவோம்
புண்ணியர் புகழ் கூறி பாடிடுவோம்
1.சபையின் அஸ்திபாரம் மூலைக்கல்லாகிய
முன்னவர் இயேசுவையே ஆராதிப்போம்
வல்லபிதாவின் வாக்குப்படி ஜனித்து
வானகம் சேர்ந்தவரை ஆராதிப்போம்
2. பரிசுத்த ஆவியை பாங்காய் நமக்களித்த
பாவியின் நேசரையே ஆராதிப்போம்
பார்வோனின் சேனையை ஆழியில் அழித்த
பரமப்பிதாவை இன்று ஆராதிப்போம்
3. எரிகோவின் கோட்டையை எளிதில் – தகர்த்திட்ட
எகோவா தேவனையே ஆராதிப்போம்
எரிகின்ற அக்கினி சூளையை தகர்த்த
எலியாவின் தேவனையே ஆராதிப்போம்

தாவீதை போல நடனங்களால் உம்மை நாதா
தொழுதிடுவேன் நான் – தாவீதை

உந்தன் வேதம் எந்தன் தீபம்
எந்தன் வாழ்வின் இன்பராகம்
என்னை ஆள வந்த தெய்வமே
எந்த நாளும் இன்பம் சூழமே

1. ஆதியும் நீரே அந்தமும் நீரே
வழியும் சத்தியமும் ஜீவனும் நீரே
அன்னையும் நீரே தந்தையும் நீரே
வாக்கு மாறாத அன்பின் தேவனும் நீரே

2. பாவியாய் என்னை மீட்கவே உலகில் ஏழையாய் பிறந்த தேவக்குமாரனே
உம் பெரும் கருணையின் நலங்களை சுவைத்தேன்
அக மகிழ்ந்து உம்மை நன்றியால் துதித்திடுவேன்

3. சர்வலோகதிபா சர்வ சிருஷ்டி நாயாகா
இயேசுவே எந்தன் வாழ்வின் தீபமும் நீர்
உம் திருநிழலில் நான் என்றும் வாழவேண்டும்
இறைவனே உம் கொடியில் என்னையும்
இணைத்துக் கொண்டாய்

மகிமை துறந்தவராம் மனுக்குலம் உதித்தவராம்
மணிமகுடம் சூழ மணவாளனாக
மணநாள் வருபவராம்
உலகத்தின் ஒளி அவராம்
உன்னத தெய்வமகன் – தேவ
உடன்படிக்கை முடிக்கவே
உலகில் வந்தவராம் – மகிமை
1. ஆயிரமாயிரமாம் தூதர் கானம் தொனித்திடவே
ஈராயிரம் ஆண்டுக்கு முன்
நம்மை தேடிவந்திட்ட உறவு
பல கிரகங்கள் படைத்தே – இன்று
ஒரு கிரகத்தில் உதித்தார்
பாரினில் நமக்காய் ஏழை கோலம்
தாழ்மையாய் ஏற்றுக்கொண்டார்
2. ஆதிபிதா தேவன் இன்று
அனுப்பின பாலகனாய்
ஆவணியோர் பாவங்களை
அழுக்கற துடைப்பவனாய்
சிலுவையில் மரித்திடவே அவர்
சிந்தையை தரித்திடவே
அவரைபோல உயிர்த்திடவே நாம்
அனுதினமும் துதித்திடுவோம் – மகிமை

அள்ள அள்ள குறையாதது – என்
அன்பர் இயேசு கிருபையது
சொல்ல சொல்ல உள்ளம் மகிழுது – என்
சொந்த மீட்பர் கிருபையது – என்
1.காலை தோறும் புதிததானது – என்
கர்த்தர் இயேசு கிருபையது
எவ்வேளையிலும் மங்காதது – என்
வேந்தன் இயேசு கிருபையது – அள்ள

2. சோர்ந்து நின்ற நேரத்திலே – என்னை
சார்ந்து நின்ற கிருபையது
கண்ணீரின் வாழ்க்கையிலே – என்னை
கரை சேர்த்த கிருபையது – அள்ள
3. பெலவீன நேரத்திலே – என்னை
பெலப்படுத்தின கிருபையது
சுகவீன நேரத்திலே – என்னை
சுகப்படுத்திய கிருபையது– அள்ள
காலை வந்ததும் கீதம் வந்தது
கீதம் வந்ததும் கிருபை வந்தது – 2
கண்ணீரைக் கொட்டி கர்த்தரைத் தேடி
களிப்பைக் கண்டேன் – இனி
வந்திடும் காலம் இன்பமாய் மாறும்
ஜெயத்தை காண்பேன் – 2 – காலை
1. ஆயிரம் ஆயிரம் ஸ்தோத்திரகீதம்
அனுதினமும் பாரில் தொனித்திடவே
மண்ணிலே பாடும் ஜெயத் துதியெல்லாம்
விண்ணிலே சென்று
விருந்தமைக்காதோ
கண்மணி போல் என்னை காத்திட்ட
தேவன்
உண்மையாய் என்னை நேசிக்கின்றார்
பிறக்கும் ஒவ்வொரு நாளும்
அவர் தரும் சந்தோஷம்
திறந்த வாசல் எல்லாம்
அவர் கொடுக்கும் உல்லாசம்
பூர்வநாளை நினைத்தேன்
புண்ணியம் கோடி உணர்ந்தேன்
எண்ணில்லா நன்மைகள் இயேசுவே
கொடுத்தார்

என்றென்றும் இயேசுவை
உள்ளமும் பாடமே – கண்ணீரை
2. செங்கடலில் அன்று பாதை
அமைத்தார்
இஸ்ரயேல் மக்களை வழி நடத்தி
சென்றார்
பரிசுத்த மன்னாவை உணவாய்
அளித்தார்
இரவிலும் பகலிலும் பாதுகாத்தார்
கசந்த மாறா மதுரமானது
வல்லமை நிறைந்த நம் தேவனாலே
வசந்த காலம் பிறந்திடுமே என் வாழ்வில்
நல்லவை எந்நாளும் நடந்திடும் என்
ஜீவியத்தில்
தேவசித்தம் செய்ய அனுதினமும்
நாடுகிறேன்
எத்தனை துன்பங்கள் எதிரே வந்தாலும்
இயேசுவின் நாமத்தில் ஜெயித்து
காட்டுவேன் – கண்

தேவா உம்மைத்தேடி என் இருவிழி
கவிபாடும்
நாளும் பொழுதெல்லாம் – அது
உம் வரவைத்தான் தேடும்
மனமே மனமே நீ கலங்காதே
மன்னவன் உன் துணையே
தினமே தினமே தேற்றரவாளன்
தேற்றுவார் அது நிஜமே
1. என்னை மீட்க தன்னுயிர் தந்த இறையே
இயேசுநாதா

விண்ணகம் சேர்க்க மண்ணகம் நீர்
வரும்
மணநாளை தேடுகிறேன்
ஆறுதல் இல்லை தேறுதல் இல்லை
என் துணை யாருமில்லை
அன்பு தணிந்து பண்பும் அகன்றது
பகட்டு உலகினிலே – தேவா
2. எருசலேம் நங்கை எட்டி பார்த்து
கண்கள் பூத்தனவே
சாட்சியாய் வாழும் சத்தியமார்கள்
மாட்சிமை காணணுமே
தருவினில் மாண்டோன் வருவேன்
என்றதால்
தாமதப்படுத்த வேண்டாம்
தாரணி மீதியே ஆளுகை செய்திட
தக்க தருணமிது – தேவா
3. உந்தன் சித்தம் ஒன்றையே – நித்தம்
செய்து மகிழ்ந்திடுவேன்
உலகத்தின் மேன்மை செல்வம் யாவும்
ஒதுக்கித் தள்ளிடுவேன்
உலக லாபம் யாவையும் – பெருத்த

நஷ்டமாய் கருதுகிறேன்
உமக்கு உகந்த சாட்சியாய் வாழும்
வாழ்வையே நாடுகிறேன்– தேவா

இயேசுராஜன் வானில் தூதர் சூழ
வருவார்
நாமும் கூட செல்ல ஆயத்தம் ஆவோம்

துன்பங்கள் துயரங்கள்
யாவும் ஓடிப்போகும்
இன்ப காணான் நாமும் சேருவோம் – இயேசு
1.மீட்கப்பட்ட இஸ்ரவேலே ஒன்றாய் கூடுவோம்
ஓசன்னா பாடுவோம்
மோசேயோடு தாவீதோடு கூடி ஆடுவோம்
மறுரூபமாகுவோம்
மகிபனின் மகிமையை நாமும் காணுவோம்
மாதேவன் பக்கமாய் கூடி சேருவோம்
2. ஜீவவிருட்ச கனிகளை நாடி புசிப்போம்
என்றென்றும் ஜீவிப்போம்
பாவம் இல்லா பரலோகில் வாழ்ந்து சுகிப்போம்
பறந்து களிப்போம்
தூதரோடு சேர்ந்து நாம் பாடி மகிழுவோம்
அகமகிழ்ந்து தேவனையே ஆராதிப்போம்

நான் பேசும் முதல் வார்த்தை
உம்மோடு தான் – நிதம்
நான் பேசும் முடிவு வார்த்தை உம்மோடு தான்
வறண்ட நிலம் தன்னில் நாவரண்டு
நீரை தேடும் கானமான் போல் என் ஆத்துமா
தேவனே உம் நாமம் மீது வாஞ்சையாய் இருக்கும்
காத்திருந்து காத்திருந்து உம்மை நாடி வாழ்கிறேன்
1.சோதனை நேரத்தில் என் சொந்தம் நீர்
வேதனை நேரத்தில் என் பந்தம் நீர்
ஜீவனை பார்க்கிலும் உம் கிருபை நல்லது
ஜீவனுள்ள மட்டும் உம்மை துதித்துப்பாடுவேன்
2. நான் நம்பும் மனிதர் என்னை கைவிட்டாலும்
நீர் எந்தன் கரம்பிடித்து வழி நடத்திடும்
உம்மை விட்டால் எந்தனுக்கு வேறு கதியில்லை
உம்மையன்றி எந்தனுக்கு யாரும் துணையில்லை

சின்ன பிள்ளையான நானுன்
அன்பில் வாழனும்
செல்ல பிள்ளையாகவே நித்தம் வளரனும்
நீர் கொடுக்கும் நன்மை மட்டும் நேசிக்காமலே
என்றும் உம்மை மட்டும் நேசிக்கும்
ஓர் உள்ளம் தாருமே
1.யோசேப்பை போல் தன் சுற்றத்தால்
ஆனாதி அடிமையாக விற்கப்பட்டாலும்
ஈசாக்கைப் போல் மோரியாமேல்
ஜீவ பலியாக படைக்கப்பட்டாலும்
என் ஜீவன் நீர் என் ஆயன் நீர்
என் ஆவல் நீர் என் காவல் நீர்
உம்மோடு இணைந்து நானும் என்றும் வாழுவேன்
2. சாத்ராக் மேஷாக் ஆபேத்னெகோ போல்
ஆக்கினி சூளையிலே தள்ளப்பட்டாலும்
ஜெபவீரன் தானியேல் போல்
சிங்க கெபியினிலே அடைக்கப்பட்டாலும்
என் தேவன் நீர் என் தந்தை நீர்
என் பந்தம் நீர் என் சொந்தம் நீர்
உம் தோளில் சாய்ந்து மகிழ்ந்து இளைப்பாறுவேன்.

அதிசயமானவரே ஆலோசனை கர்த்தரே
சமாதான பிரபு உம்மை
சார்ந்தென்றும் வாழ்ந்திடுவேன்
1.வானிலும் பூமியிலும் மேலான நாமமிதே
ராஜாதி ராஜாவாம் இயேசுவின் நாமமிதே
2. நேற்றும் இன்றும் என்றும் மாறாத நாமமிதே
நம்பினோரை என்றும் கைவிடா நாமமிதே
3. எல்லா மனிதர்களின் முழங்கால் மடங்கிடுமே
இயேசுவே தெய்வம் என்று சொல்லிடும் நாள் வருமே